**https://arimanokku.com/** UGC-CARE LISTED AND PEER REVIEWED JOURNAL
**ISSN: 2320-4842 (Print)** **ISSN: 3049-2688 (Online)**

ARIMA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

19-2 April 2025

**Published on 14, April-2025** **ISSN: 3049-2688 (Online)**

# மொழியியல் நோக்கில் தொல்காப்பியப் பிறப்பியல்

**முனைவர் த. இராமையன்**
உதவிப்பேராசிரியர் – தமிழ், வணிகவியல் புலம்
வேல் டெக் ரங்கராஜன் டாக்டர். சகுந்தலா அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனம், ஆவடி, சென்னை.

**ஆய்வுச்சுருக்கம்**

தொல்காப்பிய எழுத்ததிகாரம் தமிழ் ஒலியனியலை விரிவாக ஆராய்கிறது. ஒரு மொழியின் ஒலியனியல் அமைப்பு, ஒலியியலையும் ஒலி வெளிப்படும் முறையையும் வடிவக் குறியீடுகளையும் ஒலியன்கள் செயல்படும் முறையையும் அடிப்படையாகக் கொண்டது. அந்த வகையில் தொல்காப்பியம் பிறப்பியலில் உயிரெழுத்துக்கள், மெய்யெழுத்துக்களின் ஒலிப்பு முறை, பிறப்பு, ஒலியுறுப்புக்கள் பற்றி கருத்துக்கள் கூறுப்பட்டுள்ளது. இவை மொழியியல் அடிப்படையில் இருப்பதைக் காணமுடிகின்றது. இத்தகையப் தொல்காப்பியப் பிறப்பியலை மொழியியல் அடிப்படையில் ஆராய்வதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

**திறவுச்சொற்கள்:** ஒலியியல், ஒலிகளின் பொதுப் பிறப்பு, உயிரொலிகளின் பிறப்பு, மெய்யொலிகளின் பிறப்பு.

## முன்னுரை

தமிழ் இலக்கணங்களில் மிகவும் தொன்மையானது தொல்காப்பியமாகும். தொல்காப்பியம் இலக்கணத்தை எழுத்து, சொல், பொருள் என்று மூன்று அதிகாரங்களில் விரிவாக விளக்குகிறது. இதில் எழுத்ததிகாரத்தில் எழுத்தியல், பிறப்பியல், புணரியல் என்பதனை மிக நுட்பமாக ஆராய்ந்து விளக்கியுள்ளது. எழுத்துகள் பிறக்கும் முறையையும் அவ்வெழுத்துகள் ஒலிக்கும் முறையையும் பற்றி தொல்காப்பியர் கூறியுள்ளது இன்றைய மொழியியல் அறிஞர்கள் வியக்கும் வண்ணம் உள்ளது. தொல்காப்பியப் பிறப்பியல் அக்காலத் தமிழரின் தெளிவான அறிவியல் சிந்தனையையும் ஒலிகளின் பிறப்பு பற்றிய சிந்தனையையும் வெளிப்படுத்துகிறது.

## ஒலியியல்

மொழிகளின் ஒலிவடிவமைப்பை ஆராய்வதே ஒலியியல் ஆகும். தொல்காப்பியம் குறிப்பிடும் பிறப்பியலை மொழியியலாளர்கள் ஒலியியல் என்று கூறுவர். இது தமிழ் ஒலிகளின் பிறப்பியலை உடற்கூற்றின் அடிப்படையில் விளக்குகிறது. பேசும் பொழுது ஒவ்வொரு மொழியிலும் அதற்குரிய பற்பல ஒலிகள் தோன்றுகின்றன அவ்வொலிகளே அம்மொழியின் பேச்சொலிகளாகும். பேச்சொலிகள் பிறக்கும் முறை, அவற்றின் வகைப்பாடு, எண்ணிக்கை, ஒலிப்பு முறை ஆகியவற்றை அறிவியல் அடிப்படையில் விளக்கும் மொழியியல் பகுதியே ஒலியியல் (Phonetics) எனப்படுகிறது. அவ்வாறு பேசுவதை ஒலிப்புமுறை தவறாமல் எழுதிகாட்டும் கலையே ஒலியியல் எனப்படும். பேச்சொலிகள் மூன்று வகைகளாக ஆராயப்படுவதாக மொழியியல் அறிஞர்கள் கூறுவர். அவை,

ஒலிப்பியல் (Articulatory Phonetics)

கேட்பொலியியல் (Auditory Phonetics)

ஒலியியக்கவியல் / பௌதீக ஒலியியல் (Acoustic Phonetics)

ஒலிப்பியல் என்பது உடற்கூற்றியல் நோக்கில் ஒலிகளின் பிறப்பு குறித்து விளக்குவதாகும். ஒருவர் எழுப்பும் பேச்சொலிகளை அவரது பேச்சைக்கேட்டு மற்றொருவர் எப்படி உணர்கிறார் என்பது பற்றி கூறுவது கேட்பொலியியலாகும். பேச்சொலிகளின் பண்பு நலன்களை ஒலி ஆராய்ச்சிக் கருவி கள் மூலம் கண்டறிவது ஒலியியக்கவியலின் செயலாகும் என்று விளக்குவர். 'பேச்சொலி களை ஒலிப்பதற்குப் பயன்படும் உடல் உறுப்புகளே ஒலி உறுப்புகள் எனப்படுகின் றன. இதழ், நுரையீரல், தொண்டை, வாய், மூக்கு, பல், நாக்கு, அண்ணம் போன்றவை இதிலடங்கும்' என்று கி. கருணாகரன்(2012:12) குறிப்பிடுகிறார்.

## ஒலிகளின் பொதுப் பிறப்பு

தொல்காப்பிய எழுத்ததிகாரப் பிறப்பியல் எழுத்துக்களின் பிறப்பையும் அதன் வகைகளையும் விளக்குவதாக உள்ளது. தொல்காப்பியர் தமிழொலிகள் பிறக்கும் முறையை மிக நுட்பமாக ஆராய்ந்து எந்தெந்த உறுப்புகள் செயல்படும் பொழுது எந்தெந்த ஒலிகள் எவ்வாறு பிறக்கின்றன என்பதை அறிவியல் அடிப்படையில் விளக்கியுள்ளார். ஒலிகள் பிறப்பதை மொழியியல் அடிப்படையிலும் அவ்வொலி கள் பிறக்க காரணமாக உள்ள உறுப்புக்கள் செயல்படும் விதத்தை உடற்கூற்றியல் அடிப்படையிலும் விளக்கியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கதாகும். மொழியியலாளர்கள் ஒலிப்பான்களை இயங்கு ஒலிப்பான் (கீழ்ப்பல், கீழிதம், நா) இயங்கா ஒலிப்பான் (மேற்பல், மேலிதழ், அண்ணம்) எனப் பிரிப்பர். இவ்வொலிப்பான்கள் ஒன்றை ஒன்று அணுகும்போது பல ஒலிகளைப் பிறப்பிக்கின்றன. இயங்கு ஒலிப்பான்கள் இயங்கா ஒலிப்பான்களை அணுகும் விதத்தைத் தான் தொல்காப்பியர்,

**உந்தி முதலா முந்துவளி தோன்றித்**

**தலையினும் மிடற்றினும் நெஞ்சினும் நிலையஇப்**

**பல்லும் இதழும் நாவும் மூக்கும்**

**அண்ணமும் உளப்பட எண்முறை நிலையான்**

**உறுப்புற் றமைய நெறிப்பட நாடி**

**எல்லா எழுத்தும் சொல்லுங் காலைப்**

**பிறப்பின் ஆக்கம் வேறுவே றியல**

**திறப்படத் தெரியுங் காட்சி யான"** (தொல். எழுத்து – 83)

என்ற நூற்பாவின் வழி விளக்கியுள்ளார். தமிழில் உயிரெழுத்துக்கள், மெய்யெழுத்துக் கள் மற்றும் சார்பெழுத்துக்களின் ஒலி வடிவம் பிறக்கும் இயல்பினை ஆராந்த தொல்காப்பியர் உந்தியிலிருந்து தோன்றும் காற்றானது தலை, கழுத்து, மார்பு முதலியவை நாக்கிடையே பொருந்திப் பல், உதடு, நாக்கு, மூக்கு, அண்ணம் (மேல்வாய்) என்ற ஐந்து உறுப்புகளோடு சேர்ந்து வரும் ஒலிகளின் தொழில்களால் வெவ்வேறு எழுத்தாகிய ஒலிகளாய் பிறக்கும் என்கிறார். "ஒலிப்பு முறையை அடிப்படையாகக் கொண்டு பேச்சொலிகளை உயிர் எனவும், மெய் எனவும் இரண்டாகப் பிரிப்பர். நுரையீரலிலிருந்து வெளிவரும் காற்றும், மற்ற ஒலியுறுப்புகளால் எத்தகைய தடையும் இன்றி வெளிவரும்பொழுது எழும் ஒலிகள் உயிரொலிகள். ஒலியுறுப்புகள் அதிர்ந்தோ, அல்லது காற்றை அடைத்தோ, அல்லது வெளிவரும் காற்றை அதிரச் செய்தோ பிறக்கும் ஒலிகள் மெய்யொலிகள்." என்று முத்துசண்முகம் (2012:51) கூறுவது கவனிக்கத் தக்கது.

## உயிரொலிகளின் பிறப்பு

மொழியியலாளர்கள் உயிரொலிகளை முன்னுயிர், நடுவுயிர், பின்னுயிர் என்று ஒலிப்பான்களைக்கொண்டு மூன்றாகவும் ஒலிக்கும் பொழுது இதழ்களின் செயல்பாட் டின் அடிப்படையில் உதடுகள் குவிந்தெழும் உயிர்களை இதழ்குவி உயிர் என்றும் உதடுகள் விரிந்தோ அல்லது இயற்கையா கவோ இருக்க எழும் உயிர்களை இதழ் குவியா உயிர் அல்லது இதழ் விரி உயிர் என்றும் பெயரிட்டு வழங்குவர். மேலும் உயிரொலிகள் அனைத்தும் ஒலிப்புடைய ஒலிகள் என்றும் கூறுகின்றனர். இதனை தொல்காப்பியர் முன்பே கூறியுள்ளது சிந்திக்கத்தக்கது. உயிரொலிகளை வர்ணிப்பத ற்கு மூன்று முக்கியமான அளவு கோல்கள்

பயன்படுத்தப்படுகின்றன. அவை

இயங்கும் ஒலிப்பானாகச் செயல்படும் நாக்கின் நிலை (நா/நிலை)

நாக்கு அண்ணத்தை நோக்கி எழுகிற உயரத்தின் அளவு (நா/உயரம்)

ஒலிப்பின்போது ஏற்படும் இதழ்களின் அமைப்பு (இதழ்—விரி, குவிநிலை)

என்று மொழியியல் அறிஞர்கள் கூறுவர். “பொதுப்பட நோக்கின் வாயின் மேற் புறத்தை இயங்காத் தன்மை கொண்தாகவும், கீழ்ப்புறத்தை இயங்குத்தன்மை கொண்தாக வும் கருதலாம். மேலிதழ், அண்ணம் போன்றவை இயங்கா உறுப்புகளாகும். இயங்கும் உறுப்புகள் மேல் நோக்கியே பெரிதும் செயல்படுகின்றன.” என்ற சூ. இன்னாசி (2009:111) குறிப்பிடுகிறார். மூச்சு காற்றானது வாயறையில் எவ்வித தங்கு தடையுமின்றி அதாவது இயங்கு ஒலிப்பான் களுக்கும் இயங்கா ஒலிப்பான்களுக்கும் இடையே தடையின்றிச் செல்லும் பொழுது உயிரொலிகள் பிறக்கின்றன. உயிரொலிகள் பிறக்கும் பொழுது தன்னுடைய மாத்திரை யில் இருந்து வேறுபடுவதில்லை. தமிழில் உள்ள உயிர்கள் அனைத்தும் மிடற்றுக் காற்றின் ஒலியால் பிறக்கின்றன என்று தொல்காப்பியர் குறிப்பிடுகிறார். இதனை,

“அவ்வழிப்

பன்னீ ருயிரும் தந்நிலை திரியா

மிடற்றுப் பிறந்த வளியின் இசைக்கும்”.

(தொல். எழுத்து – 84)

என்ற நூற்பாவின் மூலம் அறியமுடிகின்றது. மேலும் அ, ஆ என்ற இரண்டும் வாய்த் திறத்தலால் பிறக்கும் (தொல். எழுத்து – 85) என்றும் இ, ஈ, எ, ஏ, ஐ என்னும் ஐந்தும் வாய்த்திறக்கும் முயற்சியாலும் மேல் வாய்ப்பல்லை அடிநாவினது விளிம்பு சென்று பொருந்துவதால் பிறக்கும் (தொல். எழுத்து – 86) என்றும் உ, ஊ, ஒ, ஓ, ஔ ஆகிய ஐந்தும் இதழ் குவிவதாலும் பிறக்கும் (தொல். எழுத்து – 87) என்று தொல்காப்பியர் விளக்குகிறார். இவற்றுள் ‘உ, ஊ, ஒ, ஓ, ஔ’ என்ற ஐந்து உயிரொலிகளும் இதழ்கள் குவிய ஒலிக்கும் இதழ்குவி உயிர்களாகும் இதனைத் தொல்காப்பியரே ‘இதழ்குவிந் தியலும்’ என்று குறிப்பிடுகிறார். இதனால் ஏனைய இரண்டு நூற்பாக்களில் கூறப்பட்ட ‘அ, ஆ, இ, ஈ, எ, ஏ, ஐ’ என்ற ஏழு உயிர்கள் இதழ் குவியாமல் பிறக்கும் உயிர்கள் என்பது தெளிவாகிறது.

மொழியியலாளர்கள் உயிரொலி பிறப்பின் பாகுபாட்டை இதழ் குவி உயிர் ‘உ, ஊ, ஒ, ஓ’ என்றும் இதழ் குவியா உயிர் ‘அ, ஆ, இ, ஈ, எ, ஏ’ என்றும் பாகுபடுத்துவர். உ, ஊ, ஒ, ஓ ஆகிய நான்கு உயிர்களும் இதழ்களைக் குவித்துக் கூறும் முயற்சியால் பிறப்பதால் அவற்றை இதழ் குவி உயிர் என்றனர். ஏனைய உயிர்கள் இதழ்களைக் குவிக்காமல் வாயைத் திறத்தல் முயற்சியால் பிறப்பதால் அவற்றை இதழ் குவியா உயிர் என்றனர். இவை தொல்காப்பியர் கூறும் கருத்தோடு ஒத்து இருப்பதைக் காணமுடிகின்றது.

## மெய்யொலிகளின் பிறப்பு

தமிழ் ஒலியன்களின் அடிப்படையில் மெய்யொலிகளின் பிறப்பை பலவறாக விளக்குகின்றனர். தொல்காப்பியம் ஒலிப்பு முறை அடிப்படையில் வல்லினம், மெல்லினம், இடையினம் என்று மூன்றாக வகைப்படுத்துகின்றது. தொல்காப்பியம் கூறும் வல்லின ஒலிகளை மொழியியலாளர் கள் ‘அடைப்பொலிகள்’ (Plosive), என்றும் மெல்லின ஒலிகளை ‘மூக்கொலிகள்’ (Nasal) என்றும் இடையின ஒலிகளை ‘மருங்கொலி (Lateral), அடியொலி (Flap), வளைநா ஒலி’ (Ret-roflex) என்றும் குறிப்பிடுகின்றனர். தொல்காப்பியர் நாவினை முதல்நா, இடைநா, நுனிநா என மூன்றாகப் பகுத்துள்ளார். அதுபோல் அண்ணத்தையும் முதலண்ணம், இடையண்ணம், நுனியண்ணம் என மூன்றாகப் பகுத்துள்ளது கவனிக்கத் தக்கது. மொழியியலார் நுனிநாக்கு, இடை நாக்கு, கடை நாக்கு என்பவற்றோடு கீழிதழையும் சேர்த்து ஒலிப்பான் என வாயின் அடிப்படை உறுப்புக்களை ஒலியுறுப்புக்களாகக் குறிப்பிடுகின்றனர்.

தொல்காப்பியர் முதல் நாவும் முதல் அண்ணமும் பொருந்துவதால் ககரம் ஙகரம் என்பவை பிறக்கும் (தொல். எழுத்து – 89) என்றும் இடைநாவும் இடை அண்ணமும் பொருந்துவதால் சகரம் ஞகரம் என்ற இரண்டும் பிறக்கும் (தொல். எழுத்து – 90) என்றும் நுனிநாவும் நுனிஅண்ணமும் பொருந்துவதால் டகரம் ணகரம் என்ற இரண்டும் பிறக்கும் (தொல். எழுத்து – 91)

என்று குறிப்பிடுகிறார். க் ங் என்ற மெய்யொழுத்துகள் பிறப்பதை மொழியிலார் ‘பின் அண்ண ஒலி’ என்று குறிப்பிடுவர். மேல்வாய்ப் பல்லின் அடிப்பக்கத்தில் நானினது நுனியானது பரந்து நன்கு அழுத்த தகரம் நகரம் பிறக்கும் (தொல். எழுத்து – 93) என்கிறார். க, ச, ட, த என்பவற்றை ‘அடைப்பொலிகள்’ என்றும் ங, ஞ, ண, ந என்பவற்றை ‘மூக்கொலி’ எனும் மொழிநூலார் கூறுவர்.

**அணரி நுனிநா அண்ணம் ஒற்ற**

**றஃகான் னஃகான் ஆயிரண்டும் பிறக்கும்.**
(தொல். எழுத்து – 94)

**நுனிநா அணரி அண்ணம் வருட**

**ரகார ழகாரமா யிரண்டும் பிறக்கும்.**
(தொல். எழுத்து – 95)

இவ்விரண்டு நூற்பாக்களில் ஒற்ற, வருட என்ற இவ்விரண்டு சொற்களில் மட்டுமே வேறுபாடு காணப்படுகிறது. இவை நுனிநா அண்ணத்தால் பிறக்கும் முதலிரண்டு வகை ஒலிகளாகும். இவற்றை “உரசொலிகள்” என்பர். ரகாரம், றகாரம் பிறந்த இடத்திலேயே ழகரமும் பிறக்கும். றகரம் ஒற்றப் பிறக்க, ரகரம் வருடப் பிறந்த உரசொலியாகும். ரகரம் அண்ணத்தின் முன்னிட ஒலியாகவும் ழகரம் பின்னிட ஒலியாகவும் பிறக்கும் என்பர். நாவினது விளிம்பு தடித்து மேற்பல்லின் அடியைப் பொருந்துவதால் அவ்விடத்தே அண்ணை த்தை ஒற்ற லகரமும், வருட ளகரமும் பிறக்கும் இதனை ‘மருங்கொலி’ என்பர் (தொல். எழுத்து – 96), இரண்டு இதழ்களும் ஒன்று சேர பொருந்துவதால் பகரமும் மகரமும் பிறக்கும் இதனை ஈரிதழ் ஒலிகள் என்பர் (தொல். எழுத்து – 97), மேற்பல்லும் கீழ் இதழும் பொருந்த வகரம் பிறக்கும் (தொல். எழுத்து – 98) என்றும் அண்ணத்தைச் சேர்ந்த மிடற்றிலிருந்து வருகின்ற ஓசைக் காற்று மேல்வாயை நன்கு அணைந்து பொருந்த யகரம் பிறக்கும் (தொல். எழுத்து – 99) என்று மெய்யொலிகளின் பிறப்பை விரிவாக விளக்குகிறார். இடையின ஒலிகள் யாவும் ஒலிப்புடைய ஒலிகளாக இருக்கின்றன. இருப்பினும் யகர ஒலி மட்டும் உச்சரிக்கும் பொழுது சற்று அழுத்தி ஒலிக்கப்படுகிறது. இதனால் ஏனைய இடையின ஒலிகளுக்குக் குரல்நாண்கள் அதிர்வதை விட யகர ஒலியை உச்சரிக்கும் பொழுது மட்டும் சற்று கூடுதலாக அதிர்வதை உணரமுடிகின்றது. இதனை உணர்ந்ததால் தொல்காப்பியர் யகர பிறப்பிற்க்குத் தனி நூற்பா அமைத்துள்ளார் என்பதை அறியமுடிகின்றது.

## முடிவுரை

தொல்காப்பியர் பிறப்பியலில் ஒலிகளின் பிறப்பு முழுவதையும் அறிவியல் அடிப்படை யில் விளக்கியுள்ளார். அறிவியல் தொழில் நுட்பம் வளராத காலத்தில் தொல்காப்பியர் தமிழ் மொழியின் எழுத்தொலிகளை மிகநுணுக்கமாக ஆராய்ந்து கூறுவது வியக்கத்தக்கது. தொல்காப்பியர் கூறிய ஒலியியல் கொள்கை, ஒலியுறுப்புக்கள், ஒலிகளின் ஒலிப்பு முறை, பிறப்பு முறை ஆகியவை தற்கால மொழியியல் அறிஞர் களின் கருத்துக்களோடு ஒத்திருப்பதைக் காணமுடின்றது. இதன் மூலம் தமிழர்கள் பல ஆண்டுகளுக்கு முன்பே அறிவியல் சிந்தனை மிக்கவர்களாக இருந்துள்ளனர் என்பதை அறியமுடிகின்றது.

## பார்வை நூல்கள்

1. இன்னாசி. சூ., எழுத்தியல், 2009, பாரி புத்தகப் பண்ணை, சென்னை.
2. கருணாகரன். கி., ஜெயா. வ., மொழியியல், 2012, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., சென்னை.
3. சண்முகம். செ.வை., எழுத்திலக்கணக் கோட்பாடு, 2001, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.
4. முத்துச்சண்முகம்., இக்கால மொழியியல், 2012, முல்லை நிலையம், சென்னை.
5. நச்சினார்க்கினியர்(உ.ஆ), தொல்காப்பியம் எழுத்ததிகாரம், 2011, சாரத பதிப்பகம், சென்னை.